DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.326/2018**

Deposition of :PW -3

| | | |
|---|---|---|
| Name | : ரஞ்சித்குமார் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 20th day of March 2025.
Accused present.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சேலம் தென்அழகாபுரத்தில் குடியிருக்கிறேன். நான் கட்டிட பணியாளராக தொழில் செய்கிறேன். இறந்துபோன செல்வகுமார் எனக்கு தெரியும். அவர் எனது மாமா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் வீட்டிற்கு முன்புறம் வசிக்கிறார். கடந்த 31.12.2017 அன்று செல்வகுமார் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பிரேதத்தை சவகிடங்கில் வைத்திருந்தார்கள். போலிசார் சவகிடங்கில் வைத்து விசாரித்துகொண்டிருந்தார்கள். என்னையும் விசாரித்தார்கள். அ.சா.1 போலிசாரிடம் செல்வகுமாரை எதிரி அடித்துவிட்டதாகசொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி அ.சா.1 சொல்லி தான்எனக்கு தெரியும். போலிசார் சவக்கிடங்கில் என்னை விசாரித்தபோது கோபி , மணிகண்டன் ஆகியோர் அங்கு இருந்தார்கள்.

சவக்கிடங்கில் ஒருமுறையும், காவல்நிலையத்தில் ஒருமுறையும்போலிசார் விசாரித்தார்கள். இறந்துபோன செல்வகுமார் எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**Sd/– L. Kalaivani,**
**III Additional District Judge,**
**Salem.**